بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.்.பா**

**20 April 2018 (03 Shabaan 1439 A.H)**

# Thanks-Giving to Allah & Advices (Part 2)

## இறைவனுக்கு நன்றியும் உங்களுக்கு சில அறிவுரைகளும் (பகுதி – 2)



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவுசும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

அல்ஹமதுலில்லாஹ்! சும்ம அல்ஹம்துலில்லாஹ்! இறை அடையாளங்களை உணர்ந்து கொண்ட பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோருக்கு அளித்துவருகின்ற அறிவுரைகளின் இரண்டாம் பகுதியினை இந்த வெள்ளிக்கிழமை உங்களிடம் பேசிக்கொள்வதற்கான தௌபீக் வழங்கிய அல்லாஹ்வுக்கு மட்டுமே அனைத்து புகழும்!

வெளிப்படையாக கூறிக்கொண்டால், எவர் ஒருவரையும் நேர்பாதையில் வழிநடத்திக கொள்ளலாம் என்பது எளிதான விஷயமல்ல. ஆனால் இது மிகச்சிறந்த நற்பண்புடைய ஒரு செயலாகின்றது. எனவே இதனை உலகெங்கும் நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டியது ஜமா அத்தின் கடமையாகும். ஜமா அத்து உறுப்பினர்கள் இத்தகைய அனைத்து வகையிலான நற்பணிகளிலும் ஈடுபட்டுக் கொள்ள வேண்டும். இத்தகைய நற்பணி எனும் சமூக சுமைகளை

அவர்கள் ஏற்றெடுத்துக் கொள்வதன் மூலம் அவர்கள் பொறுப்புணர்வுள்ள குடிமக்களாக மாறிட வேண்டும். ஏனெனில் ஒரு பொறுப்பை ஏற்றெடுத்துக் கொள்வதன் மூலம் ஒரு தனிநபரின் நேக்கம் அல்லது கருத்து மிக சிறந்த முறையில் பரிணமிக்கின்றது. அது அவர்களின் அறிவையும் நிபுணத்துவத்தையும் மற்றும் சிந்தனைத் திறனையும் ஆழப்படுத்துகிறது. வரும் காலங்களில் நம் ஜமாஅத்தை மிக சிறந்த முறையில் பராமரிப்பதற்கான கருத்துக்களை கொண்டு வரக்கூடிய சுயாதீன தனிநபர்களாக மாறிட அது அவர்களுக்கு உதவுகிறது. அத்துடன் அவர்களின் ஆளுமையை மேம்படுத்துவதற்கும் தீனுடன் நெருங்கிய உறவை வைத்துக் கொள்வதற்கும் அது அவர்களுக்கு துணை புரிகின்றது.

நமது ஜமா அத்தின் வெவ்வேறு துறைகளில் பணிபுரியும் அலுவலர்கள்- அவர்கள் எந்த பொறுப்பில் நியமிக்கப்பட்டிருந்தாலும் சரி- அவர்கள் தம் பொறுப்புகளை முன்னெடுப்பதற்கு முன்பே போதுமான பயிர்ச்சியினை பெற்றிருக்க வேண்டும். ஜமா அத்தின் மேல் இடங்களில் நம்பிக்கைக்குரிய மற்றும் பக்தி வாய்ந்த உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் உதவியால் இஸ்லாமிய அமைப்பு முறைகளை சமநிலையில் கையாளுவதற்கான ஆற்றலை அத்தகைய நபர்கள் பெற்றிருக்க வேண்டும். தக்வா இல்லாத மனிதன் உயிரற்ற ஆலை போன்றாவான். எனவே அனைத்தும் காண்பவனும் எல்லாம் கேட்பவனுமாகிய அல்லாஹ்விடம் பயபக்தியுடனும் நீதியுடனும் முழுமையான பயத்துடனும் மரியாதையுடனும் அத்தகைய நபர்கள் இருக்க வேண்டும்.

அதனால் வாழ்க்கையில் முன்னவேதான் இளைஞர்களுக்கு பொறுப்புகளை வழங்குவதன் மூலம் அல்லாஹ்வின் வழியில் அவர்களின் பொருள் வகைகளை மிக சிறந்த நிலையில் வினியோகிப்பதற்கு அது அவர்களுக்கு உதவிபுரியும். அதுவாயிலாக அவர்களின் வாழ்க்கையின் இலக்கை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். மேலும் அவர்கள் செய்வதுயெல்லாம் அல்லாஹ்வின் அன்பை நாடியவாறேயிருக்கும். நினைவில் கொள்ளுங்கள்! சாத்தான் மனிதனின் மிகப்பெரிய பகைவனாகயிருக்கின்றான். வாழ்க்கையின் பல கட்டங்களிலும் உங்களை வழி தவறச்செய்ய அவனும் அவனது இராணுவமும் முயர்ச்சித்து வருவார்கள். அவனது தீய தூண்டுதல்களிலிருந்தும் அழைப்பிலிருந்தும் நீங்கள் தடம் மாறிச் செல்வதுடன் உங்களின் முழு கவனத்தையும் அல்லாஹ்வின் மீதும் அவனது அன்பு மற்றும் உண்மையின் மீதும் வைத்து முன்செல்ல வேண்டும். எந்நேரமும் நெறியான பாதையில் பயணம் மேற்கொள்ளுங்கள். அப்பயணம் எந்த அளவிற்கு கடுமையாகயிருந்தாலும் சரி! ஆனால் நான் உறுதியளிக்கின்றேன். இந்த முட்கள் நிறைந்த பாதையின் முடிவில் நீங்கள் மாபெரும் வெகுமதிகளை பெற்று விடுவீர்கள். நீங்கள் புரிந்துக் கொள்ளுங்கள்! உங்களின் இத்தியாகம் சிறிய காலத்திற்கு மட்டுமாகும். ஆனால் நீங்கள் பெற்று விடும் நற்கூலி அல்லாஹ்வின் வாக்குறுதியின்படி நித்தியமானதாகும். ஆகவே எந்த பாதை வழியாக பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதை நீங்கள்

இப்போது சுயம் தீர்மானித்து கொள்ளுங்கள். அழிவின் பாதையா அல்லது இரட்சிப்பின் பாதையா?

நினைவில் கொள்ளுங்கள் நமது ஜமா அத்தின் எதிர்காலத்தின் வெளிச்சத்திற்காக உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் மிக முன்பே பயிற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். பிறப்பிலிருந்து இறப்பு வரையிலும். ஆனால் எந்த விதத்திலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிற்காக அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணிப்பதாக நீங்கள் அதிகாரப்பூர்வமாக வாக்குறுதிகளை அளிக்க வேண்டாம். உங்களுக்கு அந்த எண்ணமிருந்தால் இஸ்லாமிய நெறிமுறைகளின்படி நீங்கள் உங்களின் பிள்ளை வளர்த்துக் கொள்ளுங்கள். இறைவனை நேசிப்பவர்களாக அவர்களை வளர்த்துக் கொள்ளுங்கள். இறைத்தூதர்களை நேசிப்பவர்களாக அவர்களை வளர்த்துக் கொள்ளுங்கள். திருக்குர் ஆனை நேசிப்பவர்களாக அவர்களை வளர்த்துக் கொள்ளுங்கள். இஸ்லாம் மற்றும் நம் ஜமா அத்தை நேசிப்பவர்களாக அவர்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு சிறிய இப்ராஹீம்(அலை)மை போன்று மாறுங்கள். உங்களின் குழந்தைகளை ஒரு சிறிய இஸ்மாயில்(அலை)மை போன்று மாற்றுங்கள். இஸ்மாயில்(அலை) அவர்கள் பகுத்தறிவதற்கான வயதை அடைந்தபோது, இப்ராஹீம்(அலை) அவர்கள் கண்ட ஒரு கனவைப் பற்றி தம் மகன் இஸ்மாயில்(அலை) அவர்களிடம் கூறினார். அக்கனவின் மீதான இஸ்மாயில்(அலை) மின் முடிவைப் பற்றிய கருத்தை அறிய அவர் விரும்பினார். அந்நேரம், அல்லாஹ் அந்த கனவு மூலம் உங்களுக்கு காட்டியதைச் செய்யும் படி தம் தந்தைக்கு இஸ்மாயில்(அலை) அவர்கள் பதிலளித்தார். எனவே அல்லாஹ்வின் பாதையில் ஒரு குழந்தையை அர்ப்பணிப்பதற்கான முடிவைப் பற்றிய விஷயத்தில் நீங்கள் இப்ராஹீம்(அலை) மற்றும் இஸ்மாயில்(அலை) செய்தது போலவே செய்ய வேண்டும்.

“வக்பே நவ்” (Waqfe Naw) என்ற திட்டம் மூலம் ஜமா அத்தே அஹ்மதிய செய்த பெருங்கேடு விளைவிக்கும் தவறை எல்லா வகையிலும் நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்பே அல்லது பிறந்த உடனே தான் அவர்கள் அக்குழந்தையை அர்ப்பணம் செய்வது கலீ∴பாவை (கலீ∴பத்துல் மஸீஹ்) மகிழ்விப்பதற்காகும். இன்று “வக்பே நவ்” (Waqfe Naw) திட்டம் வாயிலாக அர்ப்பணம் செய்தவர்களிடமிருந்து கிடைத்த பலன் உண்மையில் மிகவும் குறைந்த சதவீதமாகும். (ஆரம்பத்தில் வாக்குறுதி அளித்தவர்களிடமிருந்து) குறிப்பாக மௌரீஷியஸில்!

மேலும் அவர்கள் புரிந்து கொள்ளும் வயதை அடைந்தால் அவர்களை கட்டாயப்படுத்த கூடாது. அதற்கு பதிலாக நீங்கள் அவர்களிடம் (மகன், மகள்) இவ்விஷயத்தைப் பற்றி பேச வேண்டும். பின்னர் இறைவழியில் பணி புரிய வேண்டுமா வேண்டாமா என்பதை மகன் அல்லது மகள் தீர்மானிக்கட்டும். கடந்த காலத்தின் தவறுகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை

மறுபடியும் செய்யாதீர்கள். பிறந்த சிறு குழந்தைகளை நீங்கள் இறைவழியில் அர்ப்பணிப்பதாக உறுதியளிக்காதீர்கள். ஏனெனில் அந்நேரம் தங்கள் செய்ய விரும்புவதை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான நாக்கு சக்தி அவர்களுக்கில்லை. மர்யமின் அம்மாவைப் போல் இருந்தால், அல்லாஹ்வின் வழியில் உங்கள் பிள்ளையை அர்ப்பணிக்குமாறு நீங்கள் விரும்புகின்றீர்கள் என்றால் அது உங்களுக்கும் அல்லாஹ்வுக்கு இடையிலான விஷயமாகும். அல்லாஹ் உங்களின் கோரிக்கையை (துவா) ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம். அதை தீர்மானிப்பது அவனாவான். நம் கோரிக்கையை அல்லது துவாவை ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக சில குறிப்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேணடும். அதற்கு இருவரும் அதாவது மர்யம் மற்றும் அவரது தாய் இருவரும் இணக்கத்துடன் பரிசுத்தமான பகுதிகளில் தனிமையில் வசித்து முழுமையாகவும் அல்லாஹ்வுக்கு ஆராதனையை செலுத்தி வந்தனர். ஆனால் நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். உங்களின் குழந்தைகளுக்காக நீங்கள் வாழ்நாள் முழுவதும் தியாகம் செய்துவிடுவதாக நீங்கள் முடிவு எடுத்துவிடாதீர்கள். அல்லாஹ்வின் அருளால், அவனது உதவியால் அது சுயம் நடந்துவிடட்டும். அதற்காக நீங்கள் மிக நல்ல முறையில் இறை வழியில் உங்களின் புதல்வர்களை அல்லது புதல்விகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்விடம் ஒரு திடமான தொடர்பை ஏற்ப்படுத்துங்கள். அந்நேரம் அப்பிள்ளைகளின் தீர்மானம் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்றவாறிருக்கும். அது அவர்களுக்கு மிக சிறந்ததாகயிருக்கும்.

அதனால் எல்லா “சிறாஜ் மாக்கின்” களையும் நான் அறிவுறுத்துகின்றேன். உங்களின் பிள்ளைகளுக்கு நீங்கள் பயிர்ச்சியளித்துக் கொள்ளுங்கள். நமது ஜமா அத்தைச் சார்ந்த அனைத்து குழந்தைகளும் இளைஞர்களும் இளம் பெண்களும் சற்று முன்னவே பயிற்ச்சிகளை ஆரம்பிக்க வேண்டும். சந்தேகமில்லை பயிற்ச்சி அளிப்பவரும் அதை பெற்றுக் கொள்பவரும் இரண்டு துறைகளில் தான் இருக்கின்றனர். சிறாஜ் மாக்கின் சாதாரண பயிற்ச்சியை ஒருவருக்கு நேரடியாக அளித்துக் கொள்ளும்போது அதற்கு இறையருளிலிருந்து வெகுமதிகள் கிடைத்துவிடுகின்றது. இச்செயல்களில் நீங்கள் ஈடுபட்டு உங்களின் நேரத்தை நீங்கள் தியாகம் செய்து கொண்டால், உங்களின் செல்வங்களை செலவு செய்து கொண்டால், உங்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு இடையூர் விளைவிப்பதற்கோ, அதன் வேகத்தை குறைப்பதற்கோ எவருக்கும் ஆகாது. அதனால் இளம் தலைமுறைகளுக்கு தனித்துவமான பொறுப்புகளை அளிக்க வேண்டியது சிறாஜ் மாக்கின் நிர்வாகத்தின் கடமையாகும். தங்களின் சிறந்த நேரத்தையும் மற்றும் திறமையையும் கொண்டு செயலாற்றுவதற்கும் அத்துடன் நம்பிக்கையை தக்கவைத்துக் கொள்ளுவதற்குமாக இளைஞர்களுக்கு அறிவுரையளிக்க வேண்டும். அவர்கள் இடைவிடாமல் தங்களின் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளட்டும். இளம் பெண்களுக்கு சிறிய சிறிய பொறுப்புகளை அளிக்க வேண்டும். அதுமூலம் பயிற்ச்சியாளருக்கும் பயிற்சி பெறுபவருக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை குறைத்து விடலாம்.

மிக நல்ல முறையில் விஷயங்களை கையாளுவதற்கு சிராஜ் மாக்கினில் கூடுதல் ஊழியர்களை தேவையாக உள்ளது. நமது நிறுவனத்திற்கு அதிக மேன்மையும் கௌரவத்தையும் சேர்ப்பதற்கு! சிறாஜ் மக்கின் அதன் செயல்த்துறையை விரிவாக்க வேண்டும். இளைய தலைமுறைகளுக்கு சுயம் செய்வதற்கான பல பொறுப்புகளையும் அளிக்க வேண்டும். இளைய தலைமுறைகள் அவர்களின் செயல்கள் மீது அல்லாஹ் எவ்வாறு அருட்கொடைகளை பொழிகின்றான் என்பதைக் குறித்து நன்கறிகின்றார்கள் அதனால் அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் உண்மையான கருத்தை உணர்ந்து செயலாற்றுவார்கள்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த பெண்கள் நமது மத அமைப்பின் கிளைகளில் நுழைந்து விடுவதுடன் அவர்களுக்கு வழங்கும் சேவை வாய்ப்புகளை பயன்படுத்தி தனித்தனியாகவும் கூட்டாகவும் சமுதாயத்திற்கு சேவை புரிய வேண்டும். நமது குழந்தைகளுக்கு நாம் புரிய வைக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு விஷயம் மனித குலத்தின் மிகவும் விலைவாய்ந்த பாரம்பரியம் என்பது பிறருக்கு சேவை செய்தல் என்பதாகும். இத்தகைய சேவைகளில் பெரும்பான்மையும் நம்பிக்கையின் பகுதியில் உட்படுகின்றது. இத்திட்டம் நன்றாக இருந்தால் பிரகாசமான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட நமது எதிர்காலத்திற்கு அது முன்னோடியாக அமையும் என நான் நம்புகின்றேன்.

அடுத்தபடியாக நமது ஆண்களுக்காக சில அறிவுரைகள். கடந்த வார பிரசங்கத்திலிருந்து பர்தாவைக் குறித்த என் விளக்கத்தின் சுருக்கம் இதுவாகும். பெண்களை மலிவான அடிமைகளாக்குவதற்கும் ஆண் சுரண்டலுக்காக பர்தா அணிவதற்கும் இஸ்லாம் கட்டளை விடுக்கவில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும். அது இறை கட்டளைகளின்படி அவர்களை சுயம் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும். ஆண்களுக்கு வீட்டுவேலை செய்வதற்கான ஒரு பொருளல்ல பெண்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உண்மையில் என்னவென்றால், எல்லா ஆண்களும் பெண்களும் இறைவனின் பார்வையில் சமமாக இருக்கின்றனர். ஆண் மற்றும் பெண் என்ற நிலையில் உடலளவிலான சில மாறுபாடுகள் உள்ளன. அதனால் தான் அவர்களின் செயல்த்துறைகளும் வெவ்வேறாகும். இக்காரணத்தால்தான் அவர்களின் அடிப்படையான கடமைகளும் செயல்களும் வித்தியாசமாக இருப்பதும். அதைப் போல் இஸ்லாமிய சட்டத்தில் சில வேறுபட்ட பயன்பாடுகளை ஏற்படுத்தியிருப்பதும் ஆண்கள் மற்றும் பெண்களின் பாலியல் அடிப்படையிலான வித்தியாசத்தை முன்வைத்தேயாகும். இருப்பினும் இந்த வேறுபட்ட அணுகுமுறைகளை சான்றின்றி உறுதியுடன் கூறிக்கொள்ளும் கொள்கையின் அடிப்படையிலோ அல்லது ஆண் மேன்மையின் அடிப்படையிலோ பார்க்க கூடாது. ஆனால் மனித உரிமைகள் சம்பந்தமாக பார்த்தால் ஆண் மற்றும் பெண் இருவர்களுக்கிடையில் எந்த வேறுபாடுகளும் இல்லை. இது கூறுவதில் எனக்கு மிக அதிகமான கவலை உள்ளன. அதாவது இந்த நவீன சமூகத்தின் மத்தியில் சர்வாதிகாரிகளான சில ஆண்கள் பெண்களின் உரிமைகளுக்கு மிகக்

குறைவான மதிப்பை அளிக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் பெண்கள் குழந்தைகளை உற்பத்தி செய்யும் ஒரு இயந்திரம் மட்டுமாகும். மட்டுமல்ல அவர்களைப் பொறுத்தவரையில் பெண்கள் அவர்களின்(கணவர்கள்) இன்பத்திற்காக அனைத்து வகையான கஷ்டங்களையும் எதிர்கொள்ள வேண்டியவர்கள். அவர்கள் ஊமையான விலங்குகளை போன்று செயல்பட வேண்டும். மற்றும் அவர்களின் மீது ஆண்கள் நடத்தப்படும் தாக்குதலுக்கு எந்த புகார்களும் அவர்கள் கூறக் கூடாது. தங்களின் மனைவிகளை எல்லா வகையிலும் உதைத்து காயப்படுத்துவதற்கான அனைத்து உரிமைகளும் தங்களுக்கு உண்டு என அவர்கள் எண்ணுகின்றனர். இஸ்லாமில் இத்தகைய நெறிகெட்ட ஏராளம் விஷயங்கள் நிகழ்கின்றது. இத்தகைய விஷயங்கள் நிகழ்வதில் என் இதயம் மிக அதிகம் கவலையடைந்துள்ளது. (ஜமா அத்தின் உள்ளேயும் வெளியேயும்) இத்தகைய செயல்கள் முற்றிலும் அநாகரீகமாகும். அவர்கள் தங்களின் தாய்மார்களின் அடிசுவடுகளிலிருந்து சொர்க்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக அவர்கள் நரகத்தில் நுழைந்து விடுகின்றனர். அவர்கள் பெண்களின் உரிமைகளை பறிக்கின்றனர். அது வாயிலாக அவர்கள் இறைக்கோபத்திற்கு ஆளாகிவிடுகின்றனர். அவர்கள் சர்வாதிகாரிகள் மட்டுமல்ல இத்தகைய நெறிகெட்ட செயல்கள் மூலம் இஸ்லாமின் அழகான பெயருக்கு இழிவை ஏற்படுத்துகின்றனர். நமது சமூக அமைப்பை அவர்கள் குலைக்கின்றனர். அதனால் இஸ்லாம் ஆண் மேலாதிக்கத்தின் மதம் என ஆட்சேபிக்கப்படுகின்றது. முஸ்லீம் நாகரீகம் மற்றும் கலாசாரம் என்பது அவர்களின் நோக்கத்தில் பெண்களை இழிவுபடுத்திக் கொள்பவையாகும். முஸ்லீம் பெண்கள் கொடுங்கோன்மை எனும் வாகன சக்கரங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அடிமைகளாக்கி வைக்கப்பட்டுள்ளனர். பழக்கவழக்கங்களில் அவர்கள் கைதியாக்கப்பட்டுள்ளனர். முஸ்லீம் ஆண்கள் தங்களின் கால் சுவடுகளில் பெண்களை நிரந்தரமாக அடக்கி வைத்துள்ளனர்.

இன்ஷா அல்லாஹ்! அடுத்த வாரமும் இதே விஷயத்தை அடிப்படையாக்கி பேசிக் கொள்வேன். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த ஒவ்வொரு உறுப்பினர்களும் இதைக்குறித்து மிக ஆழமாக சிந்திக்க வேண்டும். உங்களின் செயல்கள், தன்மைகள் மற்றும் மனைவியிடமும் சமூகத்திடமும் உங்களின் அணுகுமுறை ஆகியவற்றைக் குறித்தும் நீங்கள் சிந்திக்க வேண்டும். நினைவு கொள்ளுங்கள் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமையும் இறையடையாளங்களையும் அங்கீகரித்துக் கொண்டோம் என கூறுகின்றோர்களுக்கு சொர்க்கத்தில் நுழைந்து விடுவதற்கான பாஸ்போர்ட் அல்ல ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம். நீங்கள் உங்களின் செயல்களை மிக நல்ல முறையில் மாற்ற வேண்டும். சீர்திருத்த வேண்டும். நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும். முற்றிலும் சிறந்த நிலையில் உங்களை நீங்கள் மாற்றிட வேண்டும். அனைத்தும் அல்லாஹ்வின் திருப்திக்காக செய்ய வேண்டும். **இந்த எளியவனாகிய என் வருகையை அங்கீகரித்துக் கொண்டோம், கலீ:ஃபத்துல்லாஹ்வாக என்னை ஏற்றுக் கொண்டோம், ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமில் நுழைந்து கொண்டோம் என்பதனால் எந்த பயனும் இல்லை. நீங்கள்**

**உங்களை சுயம் சீர்திருத்திக் கொள்ளாமலிருந்தால், நல்ல முறையில் நீங்கள் நடந்துக் கொள்ளாமலிருந்தால், இஸ்லாமின் கட்டளைகள் படி உங்கள் வாழ்க்கையை வடிவமைக்காமலிருந்தால், பெற்றோர்கள் மனைவி குழந்தை ஆகியவரிடம் கருணையுடன் நடந்துக் கொள்ளாமலிருந்தால், அதைப் போன்றே உறவினர்களிடமும் அக்கம் பக்கத்தாரிடமும் நம்பிக்கை கொண்ட சகோதர – சகோதரிகளிடமும் மானிட குலத்திடமும் நல்ல முறையில் பருமாறிக் கொள்ளாமலிருந்தால் ஒரு போதும் உங்களின் முன்னால் சொர்க்க கதவு திறக்காது.** நீங்கள் ஒவ்வொருவரும் சாத்தானிய செல்வாக்கை வெல்வதற்கும் பூமியில் இஸ்லாமிற்கு ஒரு எடுத்துக் காட்டாக வாழ்வதற்கும் எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு உதவி புரியட்டும். ஆமீன்

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**

**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**

**E-M:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663